# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER SC/ST (POA)ACT, COIMBATORE.

SPL. S.C.No. 81 of 2023

Prosecution witness - 7

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-7 திருமதி. அமுதா | Taluk | |
| Father / Husband Name | | Occupation | காவல் ஆய்வாளர் |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.02.2026**

(எதிரி 1 ஆஜர். எதிரி 2 முதல் 4 ஆஜர் இல்லை. 2 முதல் 4ம் எதிரி சார்பில் பா.நி.சு.ச.பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை-**

நான் தற்போது கோவை மாநகர போக்குவரத்து புலனாய்வு பிரிவு மேற்கில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.11.2017ம் தேதி மாலை சுமார் 15.00 மணிக்கு கோவை மாவட்ட பேரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் நான் ஆய்வாளராக பணியிலிருந்தபோது, சரவணஈஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரைப் பெற்று, காவல் நிலைய குற்ற எண்.78/2017 ச/பி.498(A), 506(1) IPC and 3(1)(X), 3(1)(XI), 3(2)(v) of SC/ST (PoA) Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை தான் நான் இந்த வழக்கு சம்மந்தமாக பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையாகும். மேற்படி **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் வாதியின் புகாரை இணைத்து கனம் கோவை கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் அனுப்பி வைத்தேன். வழக்கானது வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வருவதால், புலன் விசாரணை அதிகாரி நியமிக்க வேண்டி, கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புலன் விசாரணை அதிகாரி நியமிக்க வேண்டி ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -**

புகாரில் புகார் தேதி 16.11.2017 என எழுதப்பட்டு, பின்பு 14.11.2017 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதை யார் திருத்தினார் என்று எனக்கு தெரியாது. புகார் தரும்போதே, அந்த திருத்தலுடன் தான் இருந்தது. 16.10.2017ம் தேதி நடந்ததாக சொல்லும் சம்பவமானது எந்த முகவரியில் வைத்து நடைபெற்றது என்று குறிப்பாக புகாரில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 20.10.2017ம் தேதி நடந்ததாக சொல்லும் சம்பவம் பொறுத்து சுமார் 25 நாட்கள் காலதாமதமாகத்தான் இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். புகார் கொடுத்தால் கொன்றுவிடுவேன் என மிரட்டியதால் தாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என புகாரில் புகார்தாரர் குறிப்பிட்டுள்ளார். புகாரில், 16.10.2017ம் தேதி நடந்ததாக சொல்லும் சம்பவத்தின் போது, அசா.2 சரவணன் நாகமாணிக்கம் உடனிருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையானது 14.11.2017ம் தேதி 15.30 மணிக்கு பதிவு செய்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில், அசல் முதல் தகவல் அறிக்கையானது 15.11.2017ம் தேதி காலை 10.30 மணிக்கு தான் கிடைக்கப்பெற்றுள்ளது என்றால் சரிதான். ஆனால்

முதல் தகவல் அறிக்கையினை நீதிமன்ற காவலரிடம் உடனடியாக டெஸ்பேட்ச் செய்து கொடுத்துவிட்டேன். முதல் தகவல் அறிக்கையில் இரண்டாவது பக்கத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக சொல்லும் நேரமானது, 12.30 என சொல்லப்பட்டு, பின்பு 03.30 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அது தட்டச்சு பிழையாக பதிவானதால் திருத்தம் செய்யப்பட்டது. 10.10.2017ம் தேதி எந்த சம்பவமும் நடந்ததாக புகாரில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றும், சொன்ன விதத்தில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19ம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

"என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

***sd/-K.Vivekananthan,***

**அமர்வு நீதிபதி,**

சிறப்பு நீதிமன்றம் பட்டியல் சாதியினர் மற்றும்
பட்டியல் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள்
தடுப்புச் சட்டம், கோயமுத்தூர்.